# MANIDHANAEYAM FREE IAS ACADEMY – TNPSC GROUP – II & IIA PRELIMINARY EXAM

## பொதுத்தமிழ்-பகுதி-அ-இலக்கணம்

## அலகு – 6

## பிழை திருத்தம்

**வல்லினம் மிகும் இடங்களும் மிகா இடங்களும்**

கதையை படித்தேன்; எழுதி கொண்டேன். அப்படி சொன்னது, எப்படி தெரியும்?

மேலே உள்ள தொடர்களைப் படித்துப் பாருங்கள். இவற்றை இயல்பாகப் படிக்க இயலாதவாறு சொற்களுக்கு இடையே ஓர் ஓசை இடைவெளி இருப்பதை உணர முடிகிறதல்லவா? அவற்றைக் கீழே உள்ளவாறு படித்துப் பாருங்கள்.

கதையைப் படித்தேன்; எழுதிக் கொண்டேன். அப்படிச் சொன்னது, எப்படித் தெரியும்?

இப்போது இயல்பாகப் படிக்க முடிகிறது அல்லவா? மேலும் நாம் பேசும்போது இவ்வாறுதான் பேசுகிறோம். ஒரு சொல்லின் முதலெழுத்து க, ச, த, ப ஆகிய வல்லின எழுத்து வரிசைகளுள் ஒன்றாக இருந்தால், அதற்கு முன்னால் உள்ள சொல்லின் இறுதியில் அந்த வல்லின மெய்எழுத்தைச் சேர்த்து எழுத வேண்டும். இதனை வல்லினம் மிகல் என்று கூறுவர். எல்லா இடங்களிலும் வல்லின மெய்எழுத்து மிகும் என்று கூறமுடியாது. மிதந்து சென்றது, செய்து பார்த்தான், படித்த கவிதை, பெரிய தாவரம் ஆகிய சொற்களில் வல்லினம் மிகவில்லை என்பதைக் கவனியுங்கள். இவ்வாறு வல்லின மெய் மிகக்கூடாத இடங்களை வல்லினம் மிகா இடங்கள் எனக் குறிப்பிடுவர்.

வல்லின மெய்களைச் சேர்த்து எழுதுவதன் நோக்கம் படிப்பதற்கு எளிமையாக இருக்கவேண்டும் என்பது மட்டுமன்று. செய்திகளில் கருத்துப் பிழையோ, பொருள் குழப்பமோ ஏற்படாமல் இருப்பதற்கும் வல்லினம் மிகுதலும் மிகாமையும் உதவுகின்றன.

மண்வெட்டி கொண்டு வா. மண்வெட்டிக் கொண்டு வா.

இவற்றில் முதல் தொடர் மண்வெட்டியை எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது. இரண்டாம் தொடர் மண்ணை வெட்டி எடுத்து வா என்னும் பொருளைத் தருகிறது. இவ்வாறு பொருள் தெளிவை ஏற்படுத்தவும் வல்லினம் மிகுதல் உதவுகிறது.

வல்லினம்மிக வேண்டிய இடத்தில் மிகாமல் எழுதுவதும் மிகக் கூடாத இடத்தில் வல்லின மெய் இட்டு எழுதுவதும் தவறாகும். இதனைச் சந்திப் பிழை அல்லது ஒற்றுப்பிழை எனக் குறிப்பிடுவர்.

**வல்லினம் மிகும் இடங்கள்**

அந்த இந்த என்னும் சுட்டுத்திரிபுகளை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அந்தப்பக்கம். இந்தக்கவிதை.

எந்த என்னும் வினாத்திரிபை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) எந்தத்திசை? எந்தச்சட்டை?

இரண்டாம் வேற்றுமை உருபாகிய ஐ வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா.) தலையைக் காட்டு. பாடத்தைப்படி.

நான்காம் வேற்றுமை உருபாகிய கு வெளிப்படையாக வருமிடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா.) எனக்குத் தெரியும். அவனுக்குப் பிடிக்கும்.

இகரத்தில் முடியும் வினையெச்சங்களை அடுத்து வல்லினம் மிகும். (எ.கா.) எழுதிப் பார்த்தாள். ஓடிக் களைத்தான்.

உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் வன்தொடர்க் குற்றியலுகரமாக இருந்தால் மட்டும் வல்லினம் மிகும். (எ.கா.) பெற்றுக் கொண்டேன். படித்துப் பார்த்தார்.

எதிர்மறைப் பெயரெச்சத்தின் இறுதி எழுத்து கெட்டு வருவது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆகும். இதில் வல்லினம் மிகும்.

(எ.கா.) செல்லாக்காசு, எழுதாப்பாடல்.

உவமைத்தொகையில் வல்லினம் மிகும். (எ.கா.) மலர்ப்பாதம், தாய்த்தமிழ்.

உருவகத்தில் வல்லினம் மிகும். (எ.கா.) தமிழ்த்தாய், வாய்ப்பவளம்.

எண்ணுப்பெயர்களில் எட்டு, பத்து ஆகிய இரண்டு பெயர்களில் மட்டும் வல்லினம் மிகும். (எ.கா.) எட்டுப்புத்தகம், பத்துக்காசு.

அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) அப்படிச்செய், இப்படிக்காட்டு, எப்படித்தெரியும்?

திசைப ் பெயர்களை அடுத்து வல்லினம் மிகும்.

(எ.கா.) கிழக்குக்கடல், மேற்குச்சுவர், வடக்குத்தெரு, தெற்குப்பக்கம்.

மகர மெய்யில் முடியும் சொல்லை அடுத்து வல்லினம் வந்தால், அந்த மகர மெய் அழிந்து அவ்விடத்தில் வல்லினம் மிகும்.

(எ.கா.) மரம் + சட்டம் = மரச்சட்டம், வட்டம் + பாறை = வட்டப்பாறை .

**வல்லினம் மிகா இடங்கள்**

எழுவாய்ச் சொற்களை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) தம்பி படித்தான் , யானை பிளிறியது.

அது, இது, எது ஆகிய சொற்களை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) அது சென்றது. இது பெரியது, எது கிடைத்தது?

பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் ஆகியவற்றை அடுத்து வல்லினம் மிகாது.

(எ.கா.) எழுதிய பாடல், எழுதாத பாடல்.

இரண்டாம் வேற் றுமை உருபு மறைந்து வரும் இடங்களில் (இரண்டாம் வேற்றுமைத்தொகை) வல்லினம் மிகாது. (எ.கா.) இலை பறித்தேன், காய் தின்றேன்.

உகரத்தில் முடியும் வினையெச்சங்கள் மென்தொடர்க் குற்றியலுகரமாகவோ, இடைத்தொடர்க் குற்றியலுகரமாகவோ இருந்தால் வல்லினம் மிகாது. (எ.கா.) தின்று தீர்த்தான், செய்து பார்த்தாள்.

வினைத்தொகையில் வல்லினம் மிகாது. (எ.கா.) எழுதுபொருள், சுடுசோறு

அப்படி, இப்படி, எப்படி ஆகிய சொற்களைத் தவிர, படி என முடியும் பிறசொற்களை அடுத்து வல்லினம் மிகாது. (எ.கா.) எழுதும்படி சொன்னேன். பாடும்படி கேட்டுக்கொண்டார்.

உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது. (எ.கா.) தாய்தந்தை, வெற்றிலைபாக்கு

**வல்லினம் மிகும் இடங்கள்**

வாணன் வேலைக் கொடுத்தான்.

வாணன் வேலை கொடுத்தான்.

இந்த இரண்டு தொடர்களுக்கும் உள்ள பொருள் வேறுபாடு யாது?

வல்லெழுத்துகள் க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். இவை நிலைமொழியுடன் புணர்கை யில் அவற்றின் மெய்யெழுத்துகள் தோன்றிப் புணரும். இதை வல்லினம் மிகுதல் என்பர். இவ்வாறு எந்த எந்த இட ங்களில் அவ்வல்லினம் மிகும் எ ன்பதை விதிகளி ன் மூ ல மு ம் எடுத்துக்காட்டுகள் மூலமும் அறியலாம்.

**வல்லினம் மிகும் இடங்கள்**

தற்கால உரைநடையில் வல்லினம் மிகவேண்டிய இடங்களாகக் கீழ்க்காண்பனவற்றைக் கூறலாம்.

| | | |
|---|---|---|
| 1. | அச்சட்டை<br>இந்தக்காலம்<br>எத்திசை?<br>எந்தப்பணம்? | அ, இ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டுப் பெயர்களின் பின்னும், எ என்னும் வினாவெழுத்தின் பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும். |
| 2. | கதவைத் திற<br>தகவல்களைத்திரட்டு<br>காட்சியைப்பார் | ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். |
| 3. | முதியவருக்குக்கொடு<br>மெட்டுக்குப்பாட்டு<br>ஊருக்குச்செல் | கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும். |
| 4. | எனக்கேட்டார்<br>வருவதாகக்கூறு | என, ஆக போன்ற சொல்லுருபுகளின்பின் வல்லினம் மிகும். |

மேற்கண்டவாறு வல்லினம் மிகும் இ டங்களை இனங்கண்டு பயன்படுத்தத் தொ டங்கினாலே, தவறுகளைத் தவிர்த்துவிடலாம். மரபையும் பட்டறிவையும் தாண்டி, சொற்களை ஒலித்துப் பார்ப்பதும் வல்லினம் மிகும், மிகா இடங்களை அறிவதற்கு எளியவழி எனலாம்.

**மேலும் சில வல்லினம் மிகும் இடங்களை அறிந்துகொள்வோம்**

| | |
|---|---|
| அதற்குச் சொன்னேன்<br>இதற்குக் கொடு<br>எதற்குக் கேட்கிறாய்? | அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும். |

| | |
|---|---|
| இனிக் காண்போம்<br>தனிச் சிறப்பு | இனி, தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும். |
| மிகப் பெரியவர் | மிக என்னும் சொல்லின்பின் வல்லினம் மிகும். |
| எட்டுத்தொகை<br>பத்துப்பாட்டு | எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின்பின் வல்லினம் மிகும். |
| தீப் பிடித்தது<br>பூப் பந்தல் | ஓரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும். |
| கூவாக் குயில்<br>ஓடாக் குதிரை | ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகும். |
| கேட்டுக் கொண்டான்<br>விற்றுச் சென்றான் | வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும். |
| ஆடச் சொன்னார்<br>ஓடிப் போனார் | (அகர, இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும். |
| புலித்தோல் | ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| கிழக்குப் பகுதி<br>வடக்குப் பக்கம் | திசைப் பெயர்களின்பின் வலிமிகும். |
| மல்லிகைப்பூ<br>சித்திரைத்திங்கள் | இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும். |
| தாமரைப்பாதம் | உவமைத் தொகையில் வல்லினம் மிகும். |
| சாலப்பேசினார்<br>தவச்சிறிது | சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களின்பின் வல்லினம் மிகும். |

| | |
|---|---|
| நிலாச் சோறு<br>கனாக் கண்டேன் | தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின்பின் வல்லினம் மிகும். |
| வாழ்க்கைப் படகு<br>உலகப்பந்து | சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும். |

**வல்லினம் மிகா இடங்கள்**

தோப்புக்கள் – தோப்புகள்

கத்தி கொண்டு வந்தான் – கத்திக்கொண்டு வந்தான்

மேற்கண்ட சொற்களில் வல்லினம் மிகும்போது ஒரு பொருளும் மிகாதபோது வேறொரு பொருளும் வருவதை அறியலாம். நாம் பேசும்போதும் எழுதும்போதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.

**வல்லினம் மிகா இடங்கள்:**

தற்கால உரைநடையில் வல்லினம் மிகா இடங்களாகக் கீழ்க்காண்ப வற்றைக் கூறலாம்.

| | |
|---|---|
| அது செய்<br>இது காண் | அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| எது கண்டாய்?<br>எவை தவறுகள்? | இவ்வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது. |
| குதிரை தாண்டியது.<br>கிளி பேசும். | எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது. |
| அண்ணனோடு போ.<br>எனது சட்டை. | மூன்றாம், ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது. |
| தந்தையே பாருங்கள். | விளித் தொடர்களில் வல்லினம் மிகாது. |

| | |
|---|---|
| மகளே தா. | |
| வந்த சிரிப்பு<br>பார்த்த பையன் | பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| நாடு கண்டான்.<br>கூடு கட்டு | இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது. |
| வரும்படி சொன்னார்.<br>பெறும்படி கூறினார். | படி என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது. |
| வாழ்க தமிழ்<br>வருக தலைவா! | வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது. |
| குடிதண்ணீர், வளர்பிறை,<br>திருவளர்செல்வன் | வினைத்தொகையில் வல்லினம் மிகாது. |
| ஒரு புத்தகம், மூன்று கோடி | எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது. |
| தாய்தந்தை, இரவுபகல் | உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது. |
| அன்று சொன்னார்.<br>என்று தருவார்.<br>அவராவது தருவதாவது<br>யாரடா சொல்.<br>ஏனடி செல்கிறாய்?<br>கம்பரைப் போன்ற கவிஞர் யார்? | அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி, போன்ற என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| அவ்வளவு பெரியது.<br>அத்தனை சிறியது.<br>அவ்வாறு பேசினான்.<br>அத்தகைய பாடங்கள். | அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு,<br>அத்தனை, இத்தனை, எத்தனை,<br>அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு,<br>அத்தகைய, இத்தகைய, எத்தகைய, |

| | |
|---|---|
| அப்போதைய பேச்சு.<br>அப்படிப்பட்ட காட்சி.<br>நேற்றைய சண்டை. | அப்போதைய, இப்போதைய, எப்போதைய,<br>அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட<br>நேற்றைய, இன்றைய, நாளைய ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| என்னோடு சேர்.<br>மரத்திலிருந்து பறி.<br>குரங்கினது குட்டி. | மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைத் தொடர்களில் வல்லினம் மிகாது. |
| தமிழ் படி. (ஐ)<br>கை தட்டு. (ஆல்)<br>வீடு சென்றாள். (கு)<br>கரை பாய்ந்தான். (இருந்து) | இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், வேற்றுமைத் தொகைகளில் வல்லினம் மிகாது. |
| தலைவி கூற்று.<br>தொண்டர் படை | நிலைமொழி உயர்திணையாய் அமையும் தொடரில் வல்லினம் மிகாது. |
| உறு பொருள்<br>நனி தின்றான்.<br>கடி காவல் | சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களைத் தவிர ஏனைய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகாது. |
| பார் பார்<br>சலசல | அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது. |
| கருத்துகள்<br>பொருள்கள்<br>வாழ்த்துகள் | கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதி சேரும்போது வல்லினம் மிகாது. (மிகும் என்பர் சிலர்) |
| பைகள், கைகள் | ஐகார வரிசை உயிர்மெய் ஓரெழுத்துச் சொற்களாய் வர, அவற்றோடு கள் விகுதி சேரும்போது வல்லினம் மிகாது. |

## மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள்

மாணவர்கள் பள்ளியில் பயில்கின்றபோதே கூடுதல் திறன்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். இத்திறன்கள் எதிர்காலத்தில் மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் வகையில் அமையும். தமிழ்மொழியைக் கற்பதோடு நில்லாமல் தமிழ்சார்ந்த பிறபணிகளிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவேண்டும். இந்நிலையில் அச்சுப்படி திருத்தக் குறியீடுகளை அறிந்து பிழைத்திருத்தம் செய்யும் இப்பயிற்சியானது மாணவர்களின் வேலைவாய்ப்பிற்கு உதவும்.

நூல்களையோ, இதழ்களையோ வெளியிடும்போது பிழையின்றி அச்சிடவேண்டும். எழுத்துப்பிழைகள், தொடர்ப்பிழைகள், மயங்கொலிப் பிழைகள், ஒருமை பன்மைப் பிழைகள் ஆகியவை நிறைந்த செய்திகள், படிப்போர்க்குத் தவறான கருத்தை அளித்து, குழப்பத்தில் ஆழ்த்திவிடும். எனவே, நூல்கள் அல்லது இதழ்களை அச்சிடுவதற்கு முன்னர் அச்சுப்படி திருத்துபவர் அப்பணியின்போது பிழைகளைத் திருத்துவதற்குப் பின்பற்றும் முறைகளையும் திருத்தக் குறியீடுகளையும் அறிந்திருத்தல் வேண்டும்.

### அச்சுப்படி திருத்துபவரின் பணிகள்

மூலப்படியில் (Original Copy) உள்ளபடியே செய்திகள் அச்சாகியுள்ளனவா? என்று ஒவ்வொரு வரியையும் படித்துக் கவனித்தல் வேண்டும்.

செய்தியின் உள்ளடக்கம், புள்ளிவிவரங்கள், எண்கள், அட்டவணைகள் முதலியன விடுபட்டுள்ளனவா என்பதை மூலப்படியோடு ஒப்பிட்டுக் கவனித்தல் இன்றியமையாதது. ஏனெனில், புள்ளி விவரங்கள் மாறினால் செய்தியின் பொருளில் முரண்பாடு ஏற்படும்.

அச்சுப்படி திருத்துவோர் செய்தியின் உருவையோ உள்ளடக்கத்தையோ மாற்றுதல் கூடாது.

பிழை ஏற்பட்ட சொல்லின்மீது எழுதுதல் கூடாது. ஒரு வரியின் இடப்பக்கப் பாதியில் பிழை இருந்தால் இடப்பக்க ஓரமும் வலப்பக்கப் பாதியில் பிழை இருந்தால் வலப்பக்க ஓரமும் திருத்தம் தருதல் அச்சிடுவோர்க்குப் பயனுடையதாக அமையும்.

பிழைகளை ஓரம்வரை கோடிழுத்துக் காட்டும்போது, மேலும் கீழும் உள்ள வரிகள் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

ஒரு வரியில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிழைகள் இருந்தால் பிழைகளைக் குறிக்கும் கோடுகளைத் தெளிவாகக் காட்டல் வேண்டும்.

ஒரு சொல்லில் பிழைகள் பல இருந்தால் அச்சொல்லையே நீக்கிவிட்டுச் சரியான சொல்லைத் தெளிவாகப் பக்க ஓரத்தில் தருதல் வேண்டும்.

எண்ணின் (Number) இடையில் பிழையிருந்தால் அந்தத் தொகையை முழுவதுமாகப் பிழையின்றி எழுதிக்காட்டுதல் நல்லது.

அச்சுப்படியில் இருக்கும் வண்ணத்திற்கு மாறான வண்ணமுடைய மையால் திருத்துதல் வேண்டும். இது பிழைகளைத் தெளிவாகக் கண்டறிய உதவும்.

**எடுத்துக்காட்டு**

பாரதியார் கேளிச்சித்திரத்தை விகடச்சித்திறம் என்று குசிப்பார். /லி /ர /றி

**திருத்தக் குறியீடுகளின் பிரிவுகள்**

பிழைகள் உள்ள அச்சுப்படியைத் திருத்துவதற்குக் கையாளப்படும் திருத்தக் குறியீடுகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கின்றனர். அவை:

1. பொதுவானவை (General)
2. நிறுத்தக்குறியீடுகள் தொடர்பானவை (Punctuations)
3. இடைவெளி தரவேண்டியவை (Spacing)
4. இணைக்க வேண்டியவை (Alignment)
5. எழுத்து வடிவம் (Type/Font) என்பவையாகும்.

1. **பொதுவானவை**

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| dt | அச்சடித்திருக்கும் சொல்லையோ எழுத்தையோ நீக்குக. |
| ^ | சொல்லையோ எழுத்தையோ இந்தக் குறிப்பிட்ட இடத்தில் சேர்த்துக் கொள்க. |
| [ | புதிய பத்தி (New Paragraph) தொடங்குக. |

**எடுத்துக்காட்டு**

பாரதி தம்மைப் போலவே பிறரை/ /யும் நேசிக்கும் பண்பாளர். /dt

2. **நிறுத்தக் குறியீடுகள்**

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| , / | கால் புள்ளியைச் சேர்க்கவும். |
| ;/ | அரைப் புள்ளியைச் சேர்க்கவும் |
| ./ | முற்றுப்புள்ளி இடவும். |
| ?/ | வினாக்குறி அடையாளம் இடவும். |
| !/ | வியப்புக் குறியைச் சேர்த்துக் கொள்ளவும். |
| :/ | முக்காற்புள்ளி சேர்க்கவும். |

**எடுத்துக்காட்டு**

சங்ககாலத்தில் கற்பித்தல் பணியை மன்றம் /சான்றோர் அவை /, /, / அறங்கூர் அவையம் / சமணப்பள்ளி, / போன்ற அமைப்புகள் செய்துள்ளன.

### 3. இடைவெளி தரவேண்டியவை

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
|  | சொற்களை அல்லது எழுத்துகளைச் சேர்க்கவும். இடைவெளி விட வேண்டாம். |
| | பத்திகளுக்கிடையில் வரிகளுக்கிடையில் சொற்களுக்கிடையில் இடைவெளி தருக. |

**எடுத்துக்காட்டு**

தமிழ்/இதழ்களில் தமிழ்/ஆண்டு / / திங்கள், நாள் ஆகியவற்றை முதன்  முதலாகக் குறித்தவர் பாரதியார். /

### 4. இணைக்க வேண்டியவை

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
|  | இடப்ப க்கம் தள்ளவும் |
|  | வலப் பக்கம் தள்ளவும் |
|  | பத்திகளை இணைக்கவும் |
|  | ஒற்றை மேற்கோள் குறியீடு இடுக |
|  | இரட்டை மேற்கோள் குறியீடு இடுக |

**எடுத்துக்காட்டு**

கல்வியின் சிறப்பை / கல்வி அழகே  அழகு / என நாலடியார் கூறுகிறது. 

5. **எழுத்து வடிவம்**

| குறியீடு | குறியீட்டுப் பொருள் |
|---|---|
| Unbold | வழக்கமான எழுத்தில் மாற்றுக |
| Bold | தடித்த எழுத்தில் மாற்றுக |
| Trs | சொற்கள், எழுத்துகளை இடம் மாற்றுக |
| l.c. | எழுத்துருவைச் சிறியதாக ஆக்குக |

**எடுத்துக்காட்டு – 1**

(சிலப்பதிகாரம்) (மணிமேகலை)/ B/ B/ ஆகிய இரண்டும் தமிழ்மொழியில் தோன்றிய இரட்டைக்காப்பியங்கள்.

**எடுத்துக்காட்டு – 2**

உள்ளத்துள்ளது கவிதை - /இன்ப உருவெடுப்பது கவிதை trs/

| திருத்தக்குறியீடுகளின் தமிழ்ப்பெயர்கள் |
|---|
| Apostrophe ( ' ) – எழுத்துக்குறை |
| Semicolon ( ; ) – அரைப்புள்ளி |
| Colon ( : ) – முக்காற்புள்ளி |
| Colondash (:-) – வரலாற்றுக்குறி |
| Ditto mark ( 〃 ) – மேற்படிக்குறி |
| Dash ( - ) – இடைக்கோடு |
| Bar (/) – வெட்டுக்கோடு |
| Brackets ( () ) – பிறைக்கோடு |
| Double Brackets ( { } ) – |

| இரட்டைப்பிறைக்கோடு |
| --- |
| Large Brackets ( [ ] ) - பகரஅடைப்பு |

**மொழித்திறன் பயிற்சி**

வல்லினம் மிகும் இடங்களும் வல்லினம் மிகா இடங்களும்

இருசொற்களைச் சேர்த்து எழுதும்போது இடையில் சில இடங்களில் வல்லின மெய் எழுத்துகள் ( க், ச், த், ப் ) மிக்கு வரும். மெய்யெழுத்து மிக்கு வரவேண்டிய இடத்தில் மிகாமலும் மிகாத இடத்தில் மிக்கும் வந்தால் பொருள் மாறுபடும். ஆகவே, வல்லினம் மிகும் இடங்களையும் மிகா இடங்களையும் தெளிவாக அறிதல் வேண்டும்.

**வல்லினம் மிகும் இடங்கள்**

1. **அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை அடுத்தும், எ என்னும் வினாவை அடுத்தும் வரும் வல்லினங்களாகிய க், ச், த், ப் மிகும்.**

   அ + பையன் = அப்பையன்

   இ + செடி = இச்செடி

   எ + பணி = எப்பணி

2. **அந்த, இந்த, எந்த; அங்கு, இங்கு, எங்கு; அப்படி, இப்படி, எப்படி என்னும் சுட்டு வினாச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.**

   அந்த + கோவில் = அந்தக்கோவில்

   அங்கு + சென்றான் = அங்குச்சென்றான்

   எங்கு + போனான் = எங்குப்போனான்

3. **இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.**

   நூலை + படி = நூலைப்படி

   பாலை + குடி = பாலைக்குடி

**4. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.**

அவனுக்கு + கொடுத்தான் = அவனுக்குக்கொடுத்தான்

பணிக்கு + சென்றான் = பணிக்குச்சென்றான்.

**5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்.**

தண்ணீர் + குடம் குடம் = தண்ணீர்க்குடம்

மரம் + பெட்டி = மரப்பெட்டி

பூட்டு + சாவி = பூட்டுச்சாவி

விழி + புனல் = விழிப்புனல்.

**6. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.**

பச்சை + பட்டு = பச்சைப்பட்டு

பச்சை + கிளி = பச்சைக்கிளி

**7. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.**

சாரை + பாம்பு = சாரைப்பாம்பு

மல்லிகை + பூ = மல்லிகைப்பூ

**8. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.**

மலர் + கண் = மலர்க்கண்

தாமரை + கை = தாமரைக்கை.

**9. ஓரெழுத்து ஒரு மொழியின் பின் வல்லினம் மிகும்.**

தீ + சுடர் = தீச்சுடர்

பூ + கூடை = பூக்கூடை

**10. ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.**

அழியா + புகழ் = அழியாப்புகழ்

ஓடா + குதிரை = ஓடாக்குதிரை

**11. வன்தொடர்க் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.**

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு

எட்டு + தொகை = எட்டுத்தொகை

**12. ட, ற ஒற்று இரட்டிக்கும் உயிர், நெடில் தொடர்க் குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகும்.**

ஆடு + பட்டி = ஆட்டுப்பட்டி

நாடு + பற்று = நாட்டுப்பற்று

**13. முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.**

பொது + தேர்வு = பொதுத்தேர்வு

திரு + குறள் = திருக்குறள்

**14. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

சால + பேசினான் = சாலப்பேசினான்.

தவ + சிறிது = தவச்சிறிது

**15. ஆய், என, இனி, ஆக முதலிய இடைச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

என + கூறினான் = எனக் கூறினான்.

இனி + காண்போம் = இனிக் காண்போம்.

**வல்லினம் மிகா இடங்கள்**

1. **அது, இது, அவை, இவை என்னும் சுட்டுச் சொற்களின் பின்னும் எது, எவை என்னும் வினாச்சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.**

அது + பறந்தது = அது பறந்தது.

அவை + பறந்தன = அவை பறந்தன.

எது + தங்கம் = எது தங்கம்

எவை + சென்றன = எவை சென்றன.

2. **ஆ, ஏ, ஓ என்னும் வினா எழுத்துகளின்பின் வல்லினம் மிகாது.**

அவனா + சென்றான் = அவனா சென்றான்.

அவனோ + பேசினான் = அவனோ பேசினான்.

அவனே + சிரித்தான் = அவனே சிரித்தான்.

3. **எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது.**

மலர் + பூத்தது = மலர் பூத்தது

வண்டு + பறந்தது = வண்டு பறந்தது.

4. **அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.**

அத்தனை + படங்கள் = அத்தனை படங்கள்

இத்தனை + பறவைகள் = இத்தனை பறவைகள்

எத்தனை + காக்கைகள் = எத்தனை காக்கைகள்

5. **வினைத்தொகையில் வல்லினம் மிகாது.**

ஊறு + காய் = ஊறுகாய்

சுடு + சோறு = சுடுசோறு

**6. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.**

கபிலபரணர்

இரவுபகல்

**7. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.**

தமிழ் + கற்றார் = தமிழ் கற்றார்.

கடல் + கடந்தார் = கடல் கடந்தார்.

**8. மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் (ஒடு, ஓடு) வல்லினம் மிகாது.**

பூவொடு + சேர்ந்த = பூவொடுசேர்ந்த

கபிலரோடு + பரணர் = கபிலரோடுபரணர்

**9. எட்டு, பத்து தவிரப் பிற எண்களுக்குப்பின் வல்லினம் மிகாது.**

ஒன்று + கொடு = ஒன்றுகொடு

இரண்டு + பேர் = இரண்டுபேர்

**10. வியங்கோள் வினைமுற்றுக்குப்பின் வல்லினம் மிகாது.**

வாழ்க + தமிழ் = வாழ்க தமிழ்

வாழிய + பல்லாண்டு = வாழிய பல்லாண்டு

**11. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்களில் வல்லினம் மிகாது.**

சல + சல = சலசல

பாம்பு + பாம்பு = பாம்புபாம்பு

**12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.**

கற்ற + சிறுவன் = கற்ற சிறுவன்

சிறிய + பெண் = சிறிய பெண்

**நால்வகைப் பொருத்தங்கள்**

ஒரு மொழியின் எழுத்துகளிலோ சொல்லமைப்பிலோ தொடரமைப்பிலோ சொற்பொருள் அமைப்பிலோ காலப்போக்கில் மாற்றங்கள் ஏற்படும். தற்காலத் தமிழிலும் இவ்வகையான மாற்றங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இம்மாற்றங்களை எல்லாம் தழுவிக்கொள்கிற வகையில் காலத்திற்கேற்ற இலக்கணம் நமக்குத் தேவை. மொழி வளர்ச்சியும் இலக்கணத்தின் தேவையும் ஒன்றுக்கொன்று மிக நெருக்கமான தொடர்புடையவை.

**திணை, பால், எண், இடம்:**

திணை, பால், எண், இடம் ஆகியவை மொழியின் அடிப்படைப் பண்புகள்; இவை சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும் பயன்படுத்துவதற்கும் உதவும். தமிழ்மொழியில் பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்துகின்றன. எழுவாய் உள்ள தொடர்களில் அதன் வினைமுற்று எழுவாயுடன் திணை, பால், எண், இடம் ஆகிய நால்வகைப் பொருத்தங்கள் உடையதாய் அமைகிறது. பெரும்பாலான தொடர்களில் எழுவாயை வைத்துக்கொண்டே வினைமுற்றின் திணை, பால், எண் ஆகியவற்றைச் சொல்லிவிடலாம்.

முருகன் நூலகம் சென்றான்.

இத்தொடரில், முருகன் என்னும் எழுவாய் அதன் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்திவிடுகிறது. மேலும் இந்த எழுவாய் தான் பெற வேண்டிய வினைமுற்றை உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை எனப் பொருத்தமுடன் அமையுமாறு வேண்டி நிற்கிறது. இதன்மூலம் எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு இருத்தலை அறியலாம்

**திணைப்பாகுபாடு**

உலக மொழிகள் அனைத்திலும் பெயர்ச்சொற்களே மிகுதி என்பர். பெயர்ச்சொற்களைத் திணை அடிப்படையில் உயர்திணைப் பெயர், அஃறிணைப்

பெயர் என்று இருவகையாகப் பிரிப்பர். இவ்வாறு பாகுபடுத்தும் முறை எல்லா மொழிகளிலும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை. தமிழில் பொருட்குறிப்பை அடிப்படையாகக் கொண்டு இருதிணைப் பாகுபாடு அமைந்துள்ளதை இலக்கண நூல்களால் அறியலாம்.

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே

(தொல். சொல் 1)

எனவரும் தொல்காப்பிய நூற்பா, மக்கள் என்று சுட்டப்படுவோர் உயர்திணை; அவரல்லாத பிற அஃறிணை என்று கூறுகிறது. இவ்வகைப் பாகுபாடு ஆங்கிலம் முதலிய பிற மொழிகளில் இல்லை.

இன்றைய தமிழில் யார்? எது? போன்ற வினாச்சொற்களைப் பயனிலையாக அமைத்துத் திணை வேறுபாடு அறியப்படுகிறது.

**அங்கே நடப்பது யார்?**

**அங்கே நடப்பது எது?**

என்னும் தொடர்கள் பொருட்குறிப்பின் அடிப்படையில் யார் என்ற பயனிலை உயர்திணையையும் எது என்ற பயனிலை அஃறிணையையும் உணர்த்துகின்றன.

குழந்தை, கதிரவன் போன்றவை இருதிணைக்கும் பொதுவாக வரும் பெயர்கள். இப்பெயர்கள் எழுவாயாக அமையும்போது அவற்றின் வினைமுடிபு இருதிணை பெற்றும் வருகின்றது.

குழந்தை சிரித்தான் – குழந்தை சிரித்தது

கதிரவன் உதித்தான் – கதிரவன் உதித்தது

பேச்சு வழக்கில் அஃறிணை முடிபைப் பெற்று வருவதே பெருவழக்காக உள்ளது.

**பால் பாகுபாடு**

தமிழில் பால்பகுப்பு இலக்கண அடிப்படையிலேயே அமைந்துள்ளது. தன்மை, முன்னிலை இடத்தைத் தவிர, தமிழில் உள்ள பெயர்கள், படர்க்கை இடத்தில் வரும். பயனிலை விகுதிகளான ஆன், ஆள், ஆர், அது, அன் முதலியவை பால்பகுப்பைக் காட்டுகின்றன.

பழந்தமிழில் ஐம்பால்களுள் பலர்பால்சொல் பன்மையிலும் உயர்வு கருதிச் சிலவேளைகளில் ஒருமையிலும் வந்துள்ளன.

மாணவர் வந்தனர்(பன்மை) – ஆசிரியர் வந்தார் (ஒருமை)

இக்காலத் தமிழில் பலர்பாலை உணர்த்தும் சொல் பன்மைப் பொருளை உணர்த்தாமல் ஒருமைப் பொருளை மட்டுமே உணர்த்துகிறது. பன்மைப் பொருள் உணர்த்துவதற்குக் கள் என்னும் விகுதி உதவுகிறது.

அவர் வந்தார் (ஒருமை)

அவர்கள் வந்தார்கள் (பன்மை)

தமிழில் உயர்திணையில் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் உரிய பொதுப்பெயர்கள் உண்டு. இப்பெயர்கள் தொடர்களில் அமையும்போது வினைமுற்றைப் பொறுத்தே பால் அறியப்படுகிறது.

தங்கமணி பாடினான் – தங்கமணி பாடினாள்

பால் காட்டும் விகுதிகள் இன்றியும் உயர்திணைப் பெயர்ச்சொற்கள் தத்தம் பால் உணர்த்துகின்றன.

ஆண் – பெண்; அப்பா-அம்மா;

தம்பி-தங்கை; தந்தை-தாய்

அஃறிணை எழுவாயில் ஆண் பெண் பகுப்புமுறை மரபில் இருந்தாலும் வினைமுற்றில் அவற்றை வேறுபடுத்தும் பால்காட்டும் விகுதிகள் இல்லை. எனவே

ஒருமை, பன்மை அடிப்படையிலேயே ஒன்றன்பால் பலவின்பால் என்பன அறியப்படுகின்றன.

காளை உழுதது. பசு பால் தந்தது.

ஆகிய தொடர்களில் காளை ஆண்பாலாகவும் பசு பெண்பாலாகவும் உள்ளன. ஆனால் வினைமுற்று, பால்பாகுபாட்டிற்குரிய விகுதிகளைப் பெறாமல் ஒன்றன்பால் விகுதி பெற்று முடிந்துள்ளது.

தற்காலத்தில் அஃறிணை எழுவாய் மாற்றம் அடைந்துள்ளது. மாட்டினத்தில் பெண்பாலைக் குறிக்க பசுமாடு எனவும் ஆண்பாலைக் குறிக்க காளைமாடு (எருது) எனவும் சொற்கள் வழங்கப்படுகின்றன. பிற விலங்குகளைக் குறிக்கையில் ஆண்குரங்கு, பெண்குரங்கு எனவும் எழுவாய்ப் பொதுப்பெயருடன் ஆண் பெண் என்னும் பால்பாகுபாட்டுப் பெயர்கள் முன்சேர்த்து வழங்கப்படுகின்றன.

**எண் பாகுபாடு**

இக்காலத் தமிழில் உயர்திணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெற்று வருகின்றன.

**இரண்டு மனிதர்கள்**

அஃறிணைப் பன்மைப் பெயர்கள் பன்மை விகுதி பெறுவது கட்டாயமில்லை.

**பத்துத் தேங்காய்**

இவற்றைப் பத்துத் தேங்காய்கள் என்று எழுதுவதில்லை.

இக்காலத் தமிழில் அஃறிணைப் பன்மைக்கெனத் தனி வினைமுற்றுகள் இல்லை. ஆனால், ஒருமை பன்மை வேறுபாடு எழுவாயிலேயே வெளிப்படுகிறது.

ஒரு மரம் வீழ்ந்தது

பத்து மரம் வீழ்ந்தது

தற்காலத் தமிழில் பேச்சிலும் எழுத்திலும் காணப்படுகிற ஒருமை - பன்மை பற்றிய குழப்பங்களுள் ஒன்று 'ஒவ்வொரு' என்னும் சொல்லைப் பற்றியதாகும்.

ஒவ்வொரு வீடுகளிலும் நூலகம் உள்ளது.

போன்ற தொடர்களைப் பேசவும் எழுதவும் காண்கிறோம்.

ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது.

ஒவ்வொரு பள்ளியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

என்றே பேசவும் எழுதவும் வேண்டும். (ஒவ்வொரு – ஒருமை)

**இடப்பாகுபாடு**

டம் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும். பெயர்ச்சொற்களில் இடப்பாகுபாடு வெளிப்படாது. அவன், அவள், அவர், அது, அவை முதலான பதிலிடு பெயர்களிலும் வினைமுற்றுகளிலுமே வெளிப்படும். பேசுபவன், முன்னிருந்து கேட்பவன், பேசப்படுபவன் அல்லது பேசப்படும் பொருள் ஆகிய மூன்றும் முறையே

தன்மை, முன்னிலை, படர்க்கை என அழைக்கப்படும்.

தமிழில் தன்மையிலோ முன்னிலையிலோ ஒருமை பன்மை பாகுபாடு உண்டே தவிர ஆண்பால், பெண்பால் பாகுபாடு இல்லை. சான்றாக, நான் புத்தகம் கொடுத்தேன் என்னும் தொடரில் பேசியவர் ஒருவர் என்று கூற முடியுமே ஒழிய ஆணா பெண்ணா என்று கூற முடியாது. முன்னிலையிலும் இவ்வாறே பால்பாகுபாட்டை அறிய முடியாது

தன்மைப் பன்மையில் உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என இருவகை உண்டு.

பேசுபவர் (தன்மை) முன்னிலையாரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பேசுவது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை ஆகும்.

நாம் முயற்சி செய்வோம் (உளப்பாட்டுத் தன்மைப் பன்மை)

இத்தொடரில் நாம் என்பது தன்மை முன்னிலையில் உள்ள அனைவரையும் குறிக்கிறது.

பேசுபவர் முன்னிலையாரைத் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது உளப்படுத்தாத தன்மைப் பன்மை ஆகும்.

நாங்கள் முயற்சி செய்வோம் (உளப்படுத்தாத் தன்மைப் பன்மை)

நாம் தமிழ்மொழியைப் பல்வேறு நிலையில் பல்வேறு நோக்கில் பயன்படுத்துகிறோம். பழையனவற்றைத் தவிர்ப்பதற்கும் புதியனவற்றை ஏற்பதற்கும் நாம் தயங்கியதே இல்லை. கால ஓட்டத்தில் இலக்கணங்களும் இலக்கணக் கூறுகளும் தம்மைத்தாமே புதுப்பித்துக் கொள்கின்றன.

**பொருள் மயக்கம்**

தமிழ்மொழியை எழுதும்போதும் படிக்கும்போதும் பேசும்போதும் கடைப்பிடிக்க வேண்டிய முறைகள் சில உள்ளன. அவற்றைப் பின்பற்றினால் மாணவர்கள் பொருள்மயக்கம் இல்லாமல் மொழிப்புலமை பெறுவர்.

எழுதும்போதோ பேசும்போதோ தேவையான இடங்களில் இடைவெளி விடாததும் தேவையற்ற இடங்களில் இடைவெளி விடுவதும் படிப்போர்க்கும் கேட்போருக்கும் பொருள் குழப்பத்தை ஏற்படுத்திவிடும்.

**இடைவெளியும் பொருள் வேறுபாடும்**

| | |
|---|---|
| எம் மொழி யார்க்கும் எளிது | எம்மொழியார்க்கும் எளிது |
| அப்பாவின் நலங் காண்க | அப்பாவின் நலங்காண்க |
| ஐந்து மாடிவீடு | ஐந்துமாடி வீடு |
| அன்றுமுதல் பாடம் கற்றோம் | அன்று முதல்பாடம் கற்றோம் |

இவ்வாறு சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் பொருள் மாறுபாடுகள் ஏற்படுகின்றன.

**வல்லின மெய்களும் பொருள் வேறுபாடும்**

| | |
|---|---|
| பிட்டுத் தின்றான் | பிட்டு தின்றான் |
| உள்ளக் கருத்து | உள்ள கருத்து |
| ஈட்டிக் கொண்டு வந்தான் | ஈட்டி கொண்டு வந்தான் |

போன்ற தொடர்களில் வல்லின மெய்களால் ஏற்படும் பொருள் வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்த வேண்டும்.

**காற்புள்ளியும் பொருள் மயக்கமும்**

இயல்பாக உரையாடும்போது பொருள்நிலையில் பெரும்பாலும் எந்தக் குழப்பமும் ஏற்படுவதில்லை. குரலில் ஏற்றம் இறக்கம், சொற்களில் அழுத்தம் – குழைவு, இறுதிச் சொல் மூலம் வினாவா உணர்ச்சியா என்பதையெல்லாம் உணர்ந்து பொருளை நாம் சரியாக விளங்கிக் கொள்கிறோம். ஆனால் எழுதும்போது காற்புள்ளியிடாமல் எழுதினாலோ இடம் மாற்றிக் காற்புள்ளி இட்டாலோ தொடரில் உள்ள சொற்கள், அத்தொடருக்குரிய முழுமையான பொருளைத் தராமல் வேறுபொருளைத் தந்துவிடும்.

அவள், அக்காள் வீட்டிற்குச் சென்றாள்.

இப்படிக் காற்புள்ளியிட்டு எழுதும்போது அந்தப் பெண் தன் அக்காள் வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்படுகிறது,

அவள் அக்காள், வீட்டிற்குச் சென்றாள்.

இத்தொடரில் அந்தப் பெண்ணின் அக்காள் தனது வீட்டிற்குச் சென்றாள் எனப் பொருள்வேறுபடுவதை அறியலாம்.

எனவே, நிறுத்தக்குறிகளை உரிய இடங்களில் இட்டும் இடாமலும் எழுதிப் பொருள்மயக்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

**இடைச்சொற்களும் சொல்லுருபுகளும் விகுதிகளும்**

தமிழில் உள்ள சில இடைச்சொற்கள், சொல்லுருபுகள், விகுதிகள் ஆகியவற்றைத் தொடர்களில், சொற்களில் சேர்த்தும் பிரித்தும் எழுதுவதால் பொருள் வேறுபாடு தோன்றுகிறது.

**விடும்**

தன் தவற்றினை உணர்ந்துவிடுவானாயின்

**நன்று**

தன் தவற்றினை உணர்ந்து விடுவானாயின் நன்று

**தன்**

பாண்டியன்தன் கவிதையைப் படித்தான்

பாண்டியன் தன் கவிதையைப் படித்தான்

**தான்**

கண்ணன்தான் எழுதுவதாகச் சொன்னான்

கண்ணன் தான் எழுதுவதாகச் சொன்னான்.

**பற்றி**

குகன் இராமனைப்பற்றிக் கூறினான்

குகன் இராமனைப் பற்றிக் கூறினான்

**முன்**

சில குறைகளை மக்கள் முன்வைத்தனர்

சில குறைகளை மக்கள்முன் வைத்தனர்

**முதல்**

அன்றுமுதல் அமைச்சர் வந்தார்

அன்று முதல்அமைச்சர் வந்தார்

**பால்**

அவன்பால் கொண்டு சென்றான்

அவன் பால்கொண்டு சென்றான்

**கண்**

அவன்கண் பெற்று மகிழ்ந்தான்

அவன் கண்பெற்று மகிழ்ந்தான்

**படி**

அளக்கும்படி வேண்டினான்

அளக்கும் படி வேண்டினான்

**மூலம்**

அதன்மூலம் கண்டுபிடிக்கப்பட்டது

அதன் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது

**கூட**

அவன்கூடக் கொடுத்தான்

அவன் கூடக் கொடுத்தான்

**சொல்லுருபுகள்**

வீட்டிலிருந்து சென்றான்-வீட்டில் இருந்து சென்றான்

இத்தொடரில் அமைந்துள்ள வீட்டிலிருந்து என்ற சொல்லைச் சேர்த்தும் பிரித்தும் எழுதும்போது இருவேறு பொருள் உணர்த்துவதைக் காணலாம்.

**சொற்களை மாற்றி எழுதும்போது ஏற்படும் பொருட்குழப்பம்**

தொடர்கள் அமைக்கும்போது தேர்ந்தெடுத்த சொற்களையும் சொற்களுக்குரிய தெளிவான பொருளையும் தொடரமைப்பு மாறாமல் அமைத்தல் வேண்டும்.

ஆண்டுதோறும் மறைந்த தி.ஜானகிராமன் நினைவாகக் கூட்டம் நடைபெறும்'

இத்தொடரில் உள்ள பொருட்பிழையை அறிய முடிகிறதா? தி. ஜானகிராமன் ஆண்டுதோறும் மறைந்தார் என்னும் தவறான பொருள் அமையும்படி வந்துள்ளது.

'மறைந்த தி.ஜானகிராமன் நினைவாக ஆண்டுதோறும் கூட்டம் நடைபெறும்'

என்றே அமைந்திருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு தொடரிலும் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவை அமைந்திருக்கும். சில தொடர்களில் எழுவாய் மறைந்து வருவதும் உண்டு. கீழ்க்காணும் இத்தொடர்களைப் புரிந்துகொள்ள முடிகிறதா?

இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் பணிவிடை செய்யப் புறப்பட்டான்.

பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்.

காட்டில் இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்.

இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் காட்டிற்குப் புறப்பட்டான்

இத்தொடர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைத் தருகின்றன. நான்காம் தொடர் தவிர்த்துப் பிற தொடர்கள் உணர்த்தும் பொருள் முழுமையாக வெளிப்படவில்லை.

முதல் தொடர் 'காட்டிற்குப் பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் சென்றான்' என்னும் பொருளையும் இரண்டாம் தொடர் 'யாரோ ஒருவருக்குப் பணிவிடை செய்ய இராமனுடன் இலக்குவனும் சென்றான்' என்னும் பொருளையும் மூன்றாம் தொடர் 'காட்டில் உள்ள இராமனுக்குப் பணிவிடை செய்ய இலக்குவனும் புறப்பட்டான்' என்னும் பொருளையும் தருகின்றன.

**நினைவில் கொள்ள வேண்டியவை**

1. **பண்புத்தொகை, வினைத்தொகையாக வரும் சொற்கள் ஒருசொல் என்னும் தன்மை கொண்டவை. எனவே அவற்றைப் பிரித்து எழுதக் கூடாது.**

   செங்கடல் (சரி) – செங் கடல் ( தவறு )

   கத்துகடல் (சரி) – கத்து கடல் ( தவறு )

2. **பெயர்ச்சொல் வினைச்சொல் ஆகியவற்றிற்கு இடையில் நின்று பொருளைத் தெளிவாக உணர்த்தி நிற்கும் இடைச்சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்.**

   அணாங்குகொல் (சரி)

   அணாங்கு கொல் (தவறு)

3. **இடைச்சொல்லுடன் சொற்களைச் சேர்த்தே எழுத வேண்டும்.**

   பேசியபடி பணம் கொடுத்தான் ( பேசியவாறு )

   பேசிய படி பணம் கொடுத்தான் ( படியளவு )

4. **உடம்படுமெய்கள் அமைந்த சொற்களில் உடம்படுமெய்களைச் சேர்த்துத்தான் எழுத வேண்டும்.**

   மணியடித்துச் சென்றான் (ஒலி எழுப்புதல்)

   மணி அடித்துச் சென்றான் (மணி என்பவன் யாரையோ அறைதல்)

5. **பன்மையை உணர்த்தும் 'கள்' விகுதி சேர்ந்த சொற்களைப் பிரிக்காமல் எழுத வேண்டும்.**

   ஈக்கள் மொய்த்தன – ஈக் கள் மொய்த்தன

   குரங்குகள் உண்டன – குரங்கு கள் உண்டன

6. **இரட்டைக்கிளவிச் சொற்களைச் சேர்த்து எழுத வேண்டும்**

   படபடவெனச் சிறகை அடித்தது (சரி)

   பட பட எனச் சிறகை அடித்தது (தவறு)

**7. சொற்புணர்ச்சியில் நிலைமொழியின் ஈற்றெழுத்து மெய்யெழுத்தாகவும் வருமொழி முதலெழுத்து உயிரெழுத்தாகவும் இருந்தால் அவற்றைச் சேர்த்தே எழுத வேண்டும்.**

சுடராழி – சுடர் + ஆழி

**8. உரிச்சொற்களைப் பெயருடனும் வினையுடனும் பயன்படுத்தும்போது சேர்த்தே எழுத வேண்டும்.**

கடிமணம் - கடி மணம்

**9. உம்மைத்தொகைச் சொற்களையும் நேரிணைச் சொற்களையும் எதிரிணைச் சொற்களையும் சேர்த்தே எழுத வேண்டும்.**

உற்றாருறவினர் ( சரி ) - உம்மைத்தொகை

உற்றார் உறவினர் ( தவறு )

சீரும்சிறப்பும் ( சரி ) - நேரிணைச்சொற்கள்

சீரும் சிறப்பும் (தவறு )

மேடுபள்ளம் (சரி ) - எதிரிணைச்சொற்கள்

மேடு பள்ளம் ( தவறு )

**சொற்றொடர்ப்பிழை**

திணை, பால், எண், இடம், காலம் முதலிய பிழைகள் ஏற்படாவண்ணம் தொடர் எழுதப் பழகுதல் சாலச்சிறந்தது. கீழுள்ள தொடர்கள் பிழையானவை அல்லவா? சிந்தியுங்கள்.

- கோவலன் மதுரைக்குச் சென்றது.
- பறவைகள் நெல்மணிகளை வேகமாக் கொத்தித் தின்றது.
- குதிரையும் யானையும் வேகமாக ஓடியது.
- அவன் வெண்மதியிடம் பேசினாய்.

- சென்னையிலிருந்து நேற்று வருகிறான்.

அல்லன், அல்லள், அல்லர், அன்று, அல்ல என்பனவற்றைத் திணை, பால் எண், இடம் அறிந்து ஆளுதல் வேண்டும். (அவன் அல்லன், அவள் அல்லள், அவர் அல்லர், நாய் அன்று, நாய்கள் அல்ல)

அது என்னும் வேற்றுமை உருபு அஃறிணைக்கு உரியது. வரும் சொல் உயர்திணையாயின் அது என்னும் உருபினைப் பயன்படுத்துதல் கூடாது. எனது வீடு, அரசரது மாளிகை என்று எழுதலாம். ஆனால், எனது மனைவி, அரசரது மகன் என்றெழுதுதல் பிழை (மனைவி, மகன் – உயர்திணை).

தொடர் எவ்விதக் குழப்பமும் இல்லாமல் அமைக்கப்படவேண்டும். இரண்டாவது குழந்தையிடம் கேள்வி கேட்டான் / குழந்தையிடம் இரண்டாவது கேள்வி கேட்டான். முதலிரண்டு சொற்கள் இடம் மாறியதால் தொடருக்கான பொருள் மாறுகிறது. அவன் அருகில் இருந்தான் / அவன் அருகாமையில் இருந்தான். அருகில் என்பதற்கு எதிர்ச்சொல் அருகாமை. இவ்வேறுபாடு தெரியாவிடின் தொடரின் பொருள் மாறிவிடும்.

பேருந்து மோதி மிதிவண்டியில் சென்றவர் காயம் என்னும் தொடரும் பிழையானது. பேருந்து மோதியா மிதிவண்டியில் சென்றார்? மிதிவண்டியில் சென்றவர் பேருந்து மோதி காயம் என்று எழுதவேண்டும்.

**பொதுவான பிழைகள்**

சுடுதண்ணீர்என்று எழுதுவதும் பிழையே. தண்ணீர் - குளிர்ந்த நீர். சூடும் குளிருமாக நீர் எப்படி இருக்கமுடியும்? நடுசென்டரில் நின்றான் - நடு என்பது தமிழ். சென்டர் என்பது ஆங்கிலம். இரண்டிற்கும் ஒரே பொருள். நடுவில் நின்றான் என்று எழுதினாலே போதும்.

ஒரு வரியின் இறுதியிலுள்ள சொல்லைப் பிரித்து எழுதுவதாக இருந்தால் பொருள் கெடாதபடி பிரிக்கவேண்டும். நம்பியார் கூடச் சென்றார் என்பதற்கும், நம்பி யார் கூடச் சென்றார் என்பதற்கும் பொருள் வேறுபாடு உண்டு.

வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது.

| சரி | தவறு |
|---|---|
| திருவளர்செல்வன் /செல்வி | திருவளர்ச்செல்வன்\| செல்வி |
| திருநிறைசெல்வன் /செல்வி | திருநிறைச்செல்வன்/ செல்வி |

**பிழை தவிர்க்கச் சில குறிப்புகள்**

- ஒருவர் சொல்லச் சொல்லக் கேட்டு எழுதிப் பழகுதலும் உதவும்.
- சொல்லுக்கான பொருளை நினைவில் கொள்ளுதல் சிறந்த பயிற்சியாகும்.
- மரபுச்சொற்களைக் கற்றல் இன்றியமையாத ஒன்றாகும். (யானை கன்று; குதிரை –கனைக்கும்)
- இலக்கண விதிகளை மனத்துள் பதித்து வைப்பதும் நமது கடமை.
- எழுதியதை மீளப் படித்துப் பார்த்துப் பிழையிருப்பின் திருத்துதலும் கடமையாகும்.

**சந்திப்பிழை நீக்குதல்**

ஒரு சொல் வல்லினத்தை முதலாவதாக கொண்ட மற்றொரு சொல்லோடு சேரும் போது வல்லின ஒற்று இடையில் சேரும் இதனை வல்லினம் மிகும் என்பர். க,ச,த,ப என்னும் வல்லின உயிர் மெய்களைக் கொண்ட சொற்கள் வரும்பொழுது சில இடங்களில் க்,ச்,த்,ப் என்னும் மெய்கள் தோன்றி உச்சரிப்பை எளிமையாக்கும். சில இடங்களில் தோன்றாமலேயே இயல்பாக நிற்கும். இதனை வல்லினம் மிகும் இடங்கள், வல்லினம் மிகா இடங்கள் என்று அழைப்பர். எந்தெந்த இடங்களில் வல்லினம் மிகும், வல்லினம் மிகாது எனக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**வல்லினம் மிகும் இடங்கள்**

1. **இரண்டாம் வேற்றுமை விரி (ஐ)யில் வல்லினம் மிகும்.**

| | | |
|---|---|---|
| புலியை கொன்றான் | - | புலியைக் கொன்றான் |
| பொருளை சேர்த்தான் | - | பொருளைச் சேர்த்தான் |
| நூலை படி | - | நூலைப் படி |
| பகையை துரத்து | - | பகையைத் துரத்து |

2. **நான்காம் வேற்றுமை விரி (கு) யில் வல்லினம் மிகும்.**

| | | |
|---|---|---|
| வீட்டுக்கு போனேன் | - | வீட்டுக்குப் போனேன் |
| நண்பனுக்கு கொடு | - | நண்பனுக்குக் கொடு |
| பூட்டுக்கு சாவி | - | பூட்டுக்குச் சாவி |
| ஊருக்கு பாதை | - | ஊருக்குப் பாதை |

3. **வன்தொடர் குற்றியலுகரத்தின் பின் இருவகை புணர்ச்சியிலும் வலி மிகும்.**

| | | |
|---|---|---|
| **அச்சு பலகை** | - | அச்சுப்பலகை |
| வாக்கு கொடு | - | வாக்குக் கொடு |
| பாக்கு தூள் | - | பாக்குத் தூள் |
| படித்து பார் | - | படித்துப் பார் |

4. **ஓரெழுத்து ஒருமொழியின் பின் வல்லினம் மிகும்.**

| | | |
|---|---|---|
| தீ புகை | - | தீப்புகை |
| தை பொங்கல் | - | தைப்பொங்கல் |
| **ஈ தலை** | - | ஈத்தலை |
| அ குடம் | - | அக்குடம் |

6. **தனிக் குறிலை அடுத்து வரும் ஆ எனும் நெடிலுக்குப் பின் வலி மிகும்.**

பலா சுளை - பலாச்சுளை

உலா பாடினான் - உலாப் பாடினான்

இரா பகல் - இராப்பகல்

கனா திறம் - கனாத்திறம்

7. **பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.**

பச்சை பட்டு - பச்சைப் பட்டு

வட்டம் கோட்டை - வட்டக்கோட்டை

சதுரம் பலகை - சதுரப்பலகை

வண்ணம் களஞ்சியம் - வண்ணக் களஞ்சியம்

8. **மற்ற, இனி, தனி, மற்று, மற்றை எனும் சொற்களுக்குப் பின் வலி மிகும்.**

இனி போகலாம் - இனிப் போகலாம்

தனி காடு - தனிக்காடு

மற்று கண்டவை - மற்றுக் கண்டவை

மற்ற பொருள் - மற்றப் பொருள்

மற்றை கூறுகள் - மற்றைக் கூறுகள்

9. **உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

சால சிறந்தது - சாலச் சிறந்தது

தவ பெரியது - தவப் பெரியது

தவ பயன் - தவப்பயன்

**10. அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி, அங்கு, இங்கு, எங்கு இச்சொற்களுக்குப் பின் வலி மிகும்.**

அந்த தோட்டம் - அந்தத் தோட்டம்

இந்த படம் - இந்தப் படம்

அப்படி செய்தான் - அப்படிச் செய்தான்

எப்படி பார்ப்பார் - எப்படிப் பார்ப்பார்

அங்கு சென்றான் - அங்குச் சென்றான்

இங்கு சென்றான் - இங்குச் சென்றான்

**11. ஆய், போய் எனும் வினையெச்சங்களுக்குப் பின் வலி மிகும்.**

படிப்பதாய் சொன்னான் - படிப்பதாய்ச் சொன்னான்

போய் சேர்ந்தான் - போய்ச் சேர்ந்தான்

**12. ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.**

ஓடா புலி - ஓடாப் புலி

வளையா செங்கோல் - வளையாச் செங்கோல்

**13. முற்றியலுகர சொற்களுக்குப் பின் வலி மிகும்.**

திரு குறள் - திருக்குறள்

பொது சொத்து - பொதுச் சொத்து

**14. உயிரீற்றுச் சொற்களின் பின் வல்லினம் மிகும்.**

மழை காலம் - மழைக்காலம்

பனி துளி - பனித்துளி

**15. எட்டு, பத்து எண்களுக்குப் பின் வல்லினம் மிகும்.**

எட்டு தொகை - எட்டுத்தொகை

பத்து பாட்டு - பத்துப்பாட்டு

**16. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.**

எலி குஞ்சு - எலிக்குஞ்சு

பனி துளி - பனித்துளி

மார்கழி திங்கள் - மார்கழித் திங்கள்

எறும்பு சாரை - எறும்புச் சாரை

**வல்லினம் மிகா இடங்கள்**

**1. பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகாது:**

வந்த புத்தகம், படித்த பையன், புதிய பொம்மை

**2. மூன்றாம், ஆறாம் வேற்றுமை விகுதிமுன் வல்லினம் மிகாது:**

அவனது நோட்டு, எனது சட்டை, கண்ணனோடு விளையாடு.

**3. சுட்டுப் பெயர்களின் முன் வல்லினம் மிகாது:**

அது சிறியது, இது பெரியது

**4. எட்டு, பத்து தவிர மற்ற எண்களின் முன் வல்லினம் மிகாது:**

ஒரு பேனா நான்கு கால்கள், ஏழு கடல்

**5. இரண்டாம் வேற்றுமைத் தொகையின் முன் வல்லினம் மிகாது:**

கதை சொன்னான், காடு கடந்தான்

**6. என்று என்னும் சொல்லின் முன் வல்லினம் மிகாது:**

என்று கூறினார், என்று சொன்னான்

**7. ஈறுகெடாத பெயரெச்சத்தின் முன் வல்லினம் மிகா:**

ஓடாத குதிரை, ஆடாத பொம்மை

**8. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது:**

தாய்தந்தை, செடிகொடி

**9. எழுவாய்ப் பெயர் வல்லினம் மிகாது :**

கண்ணகி கண்டாள், நம்பி பார்

**10. வினைத்தொகையின் வல்லினம் மிகாது :**

ஊறுகாய், சுடுகாடு

**11. பலவகை வினை எச்சங்களின் முன் வல்லினம் மிகாது:**

நடந்து போனான், உண்டு களித்தான், சோர்ந்து போனான்

**12. ஆ, யா, ஓ, ஏ என்னும் வினா இடங்களில் மிகாது:**

அவளா பேசியது, காயோ கனியோ

**13. படி என்னும் சொல்வருமிடத்தில் வல்லினம் மிகாது:**

அதன்படி நட, சொன்னபடி கேள்

**14. வினைமுற்றுகளின் முன் வல்லினம் மிகாது:**

பறந்தன பறவைகள், வந்தன கூட்டம்

**15. விளிப்பெயர், ஏவல், முன்னிலை வினைமுற்று வல்லினம் மிகாது:**

வா தம்பி, போ, தம்பி

**16. சிறிய, பெரிய என்ற சொற்களின் முன் வல்லினம் மிகாது:**

சிறிய கடை, பெரிய பை, பெரிய கோவில்

**ஒருமைப் பன்மை – பிழை நீக்குதல் மரபு பிழைகள்**

ஒரு வாக்கியத்தில் எழுவாய் பன்மையில் இருக்கும் பொழுது பயனிலையும் பன்மையில் தான் இருக்க வேண்டும். வாக்கியங்களைப் பிழையின்றி எழுதச் சில இலக்கண நெறிகளைக் கையாள வேண்டும். அவையாவன,

1. உயர்திணை எழுவாய், உயர்திணைப் பயனிலையைப் பெற்று வரும். அதேபோன்று அஃறிணை எழுவாய்க்குப்பின் அஃறிணை வினைமுற்றே வரவேண்டும்.
2. எழுவாய் ஐம்பால்களுள் எதில் உள்ளதோ அதற்கேற்ற வினைமுற்றையே பயன்படுத்த வேண்டும்.
3. கள் விகுதி பெற்ற எழுவாய், வினைமுற்றிலும் கள் விகுதிபெறும். அதே போன்று அர் விகுதி பெற்றிருந்தால் வினைமுற்றிலும் அர் விகுதிபெறும்.
4. எழுவாய் ஒருமையாயின் வினைமுற்றும் ஒருமையாகவே இருக்க வேண்டும்.
5. கூறியது கூறல் ஒரே தொடரில் இடம் பெறக் கூடாது.
6. வாக்கியத்தில் உயர்திணை, அஃறிணைப் பெயர்கள் கலந்துவந்தால், சிறப்புக் கருதின் உயர்திணைப் பயனிலைக் கொண்டும், இழிவு கருதின் அஃறிணைப் பயனிலை கொண்டும் வாக்கியத்தை முடிக்க வேண்டும்.

**எ.கா:**

| பிழை | திருத்தம் |
|---|---|
| 1. தங்கை வருகிறது | தங்கை வருகிறாள் |
| 2. தம்பி வந்தார் | தம்பி வந்தான் |
| 3. மாணவர்கள் எழுதினர் | மாணவர்கள் எழுதினார்கள் |
| 4. ஆசிரியர் பலர் வந்தார்கள் | ஆசிரியர் பலர் வந்தனர் |
| 5. மங்கையர்க்கரசியார் பேசினாள் | மங்கையர்க்கரசியார் பேசினார் |
| 6. என் எழுதுகோல் இதுவல்ல | என் எழுதுகோல் இதுவன்று |

| | |
|---|---|
| 7. அவன் மாணவன் அல்ல | அவன் மாணவன் அல்லன் |
| 8. உடைகள் கிழிந்து விட்டது | உடைகள் கிழிந்து விட்டன |
| 9. செழியன் இன்று ஒரு புதிய நூல் ஒன்று வாங்கினான் | செழியன் இன்று புதிய நூல் ஒன்று வாங்கினான் |
| 10. தலைவர் நாளை வந்தார் | தலைவர் நாளை வருவார் |
| 11. ஆமைகள் வேகமாக ஓடாது | ஆமைகள் வேகமாக ஓடா |
| 12. நதிகள் தோன்றுமிடத்தில் சிறியதாய் இருக்கும் | நதிகள் தோன்றுமிடத்தில் சிறியனவாய் இருக்கும் |
| 13. தலைவர் தன் தொண்டர்களுக்கு நன்றி கூறினார் | தலைவர் தம் தொண்டர்களுக்கு நன்றி கூறினார் |
| 14. ஒவ்வொரு ஊர்களிலும் தொலைக்காட்சிப் பெட்டி உள்ளது | ஒவ்வோர் ஊரிலும் தொலைக்காட்சிப் பெட்டி உள்ளது. |
| 15. தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் தொன்மையானது | தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் தொன்மையானது |
| 16. மூடனும் மாடும் குளத்தில் குளித்தனர் | மூடனும் மாடும் குளத்தில் குளித்தன |
| 17. ஆற்று வெள்ளத்தில் மரங்களும் குடிசைகளும் மக்களும் மிதந்து சென்றனர் | ஆற்று வெள்ளத்தில் மரங்களும் குடிசைகளும் மக்களும் மிதந்து சென்றன. |

## வழுவுச் சொற்களை நீக்குதல் – பிறமொழி சொற்களை நீக்குதல்

இப்பகுதி வினாக்கள் தேர்வாளர்களின் தமிழ் புலமையை அறியும் விதத்தில் பிறமொழிச் சொற்றொடர்களையும், துாய தமிழ்ச் சொற்றொடர் ஒன்றையும் கொடுத்து கேட்கப்படுகின்றன. அதற்கேற்ப பிறமொழிச் சொல்லுக்கு இணையான தமிழ்ச் சொல்லை கீழே கொடுத்துள்ளோம். இவற்றை நன்கு படித்து நினைவில் நிறுத்திக்கொள்ளவும்.

| **வழுஉச் சொற்கள்** | | **திருத்தம்** |
|---|---|---|
| சிகப்பு | - | சிவப்பு |
| அகண்ட | - | அகன்ற |
| அதுகள் | - | அவை |
| அருவாமனை | - | அரிவாள்மனை |
| அருகாமையில் | - | அருகில் |
| அறுவறுப்பு | - | அருவருப்பு |
| அங்கிட்டு | - | அங்கு |
| அமக்களம் | - | அமர்க்களம் |
| அத்தினி | - | அத்தனை |
| அவுத்து | - | அவிழ்த்து |
| ஆச்சு | - | ஆயிற்று |
| இரும்பல் | - | இருமல் |
| இங்கிட்டு | - | இங்கு |
| இறச்சி | - | இறைச்சி |
| இவையன்று | - | இவையல்ல |
| ஈர்கலி | - | ஈர்கொல்லி |

| | | |
|---|---|---|
| உடமை | - | உடைமை |
| உருச்சி | - | உரித்து |
| ஊரணி | - | ஊருணி |
| அருணைக் கயிறு | - | அரைஞாண்கயிறு |
| புஞ்சை | - | புன்செய் |
| பாவக்காய் | - | பாகற்காய் |
| தவக்களை | - | தவளை |
| கொரங்கு | - | குரங்கு |
| முயற்சித்தார் | - | முயன்றார் |
| பேரன் | - | பெயரன் |
| வேர்வை | - | வியர்வை |
| இடதுபுறம் | - | இடப்புறம் |
| உசிரு | - | உயிர் |
| எம்பது | - | எண்பது |
| ஒருவள் | - | ஒருத்தி |
| கறம் | - | கரம் |
| காக்கா | - | காக்கை |
| கிரணம் | - | கிரகணம் |
| குடக்கூலி | - | குடிக்கூலி |
| கோர்வை | - | கோவை |
| சமயல் | - | சமையல் |
| சிலது | - | சில |

| | | |
|---|---|---|
| அப்ளாம் | - | அப்பளம் |
| அடமழை | - | அடைமழை |
| ஆத்திற்கு | - | ஆற்றிற்கு |
| ஆம்பிள்ளை | - | ஆண்பிள்ளை |
| இடப்பக்கம் | - | இடதுபக்கம் |
| இடக்கை | - | இடதுகை |
| இளனி | - | இளநீர் |
| இடைபோடு | - | எடைபோடு |
| இத்துபோதல் | - | இற்றுப்போதல் |
| உசிர் | - | உயிர் |
| உந்தன் | - | உன்றன் |
| உலந்து | - | உலர்ந்து |
| எண்ணெ | - | எண்ணெய் |
| ஒருக்கால் | - | ஒருகால் |
| ஒட்டரை | - | ஒட்டடை |
| கடப்பாறை | - | கடப்பாரை |
| இசிக்கின்றான் | - | இழிக்கின்றான் |
| காத்து | - | காற்று |
| ஆத்தக்கரை | - | ஆற்றங்கரை |
| **காவா** | - | வாய்க்கால் |
| தோப்பனார் | - | தகப்பனார் |
| வண்ணாத்திப்பூச்சி | - | வண்ணத்துப்பூச்சி |

| | | |
|---|---|---|
| பேத்தி | - | பெயர்த்தி |
| இத்தினை | - | இத்தனை |
| இடபோடு | - | எடைபோடு |
| எழவு | - | இழவு |
| கண்ணாலம் | - | கலியாணம் |
| கடகால் | - | கடைக்கால் |
| கவுளி | - | கவளி |
| கட்டிடம் | - | கட்டடம் |
| கருவேற்பிலை | - | கறிவேப்பிலை |
| கெனவு | - | கனவு |
| கோடாலி | - | கோடரி |
| சந்தணம் | - | சந்தனம் |
| சாயங்காலம் | - | சாயுங்காலம் |
| சிலவு | - | செலவு |
| சீக்காய் | - | சீகைக்காய் |
| தடுமாட்டம் | - | தடுமாற்றம் |
| தலகாணி | - | தலையணை |
| தாவாரம் | - | தாழ்வாரம் |
| திரேகம் | - | தேகம் |
| தொடப்பம் | - | துடைப்பம் |
| நாத்தம் | - | நாற்றம் |
| நேத்து | - | நேற்று |

| | | |
|---|---|---|
| பன்னெண்டு | - | பன்னிரெண்டு |
| புண்ணாக்கு | - | பிண்ணாக்கு |
| பொம்பளை | - | பெண்பிள்ளை |
| மாயிலை | - | மாவிலை |
| முழுங்கு | - | விழுங்கு |
| மெனக்கெட்டு | - | வினைகெட்டு |
| முந்தாணி | - | முன்றாணை |
| ரொம்ப | - | நிரம்ப |
| வலதுபக்கம் | - | வலப்பக்கம் |
| வெய்யல் | - | வெயில் |
| வெட்டிப்பேச்சு | - | வெற்றுப்பேச்சு |
| சுவற்றில் | - | சுவரில் |
| தமயன் | - | தமையன் |
| தாப்பாள் | - | தாழ்ப்பாள் |
| திருவிளா | - | திருவிழா |
| துடங்கு | - | தொடங்கு |
| நஞ்ச | - | நன்செய் |
| நெனவு | - | நினைவு |
| நோம்பு | - | நோன்பு |
| பொண்ணு | - | பெண் |
| மாத்தினான் | - | மாற்றினான் |
| மாச்சி | - | மாட்சி |

| | | |
|---|---|---|
| முழித்தான் | - | விழித்தான் |
| மோர்ந்து | - | மோந்து |
| முன்னூறு | - | முந்நூறு |
| வயிறு | - | வயறு |
| வெங்கலம் | - | வெண்கலம் |
| வேணும் | - | வேண்டும் |
| வைக்கல் | - | வைக்கோல் |